# விலைகள் கூலிகள் தொழில்நிலை

## பொதுவான விலை மாற்றங்கள்

பொது விலை மட்டத்தில் 1990 ஆம் ஆண்டு கணிசமான அதிகரிப்பினைக் கண்டது. ஆண்டுச் சராசரி அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1989 இன் 11.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 21.5 சதவீதத்தால் அதிகரித்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையிலான அதிகரிப்பு (1989 திசெம்பருக்கு மேலாக 1990 திசெம்பர்) சிறிதளவு குறைவாக 19.6 சதவீதமாக விளங்கியது. விலை மாற்றத்தின் விரைவுபடுத்தலானது, மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் பதிவு செய்யப்பட்ட 22.2 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்புடன் முதலாந்தரச் சந்தை மட்டத்திலும் பிரதிபலித்தது. 1989 இல் நேரிணையான அதிகரிப்பு 9.0 சதவீதமாகும்.

ஆண்டின் முதல் அரைப்பகுதியில் விலையில் ஏற்பட்ட விரைந்த அதிகரிப்பிற்கு நிருவகிக்கப்பட்ட விலைகளில் திருத்தச் சீராக்கங்கள் குறிப்பிடத்தக்க காரணிகளாக அமைந்தன. முதல் நான்கு மாதங்களில் வளமாக்கியின் விலைகள் கணிசமான அளவுக்கு மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து நெல்லின் உத்தரவாத விலையும் உயர்த்தப்பட்டது. மிகவும் சாதகமான சிறுபோக அறுவடை ஆண்டின் மூன்றாம் காற்பகுதியில் விலைகளில் தணிப்பை ஏற்படுத்தியபோதிலும் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மீளமைப்புக்கள் 1990 இன் இறுதி மாதங்களில் விலைகள்மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தினை ஏற்படுத்தின. மின் தீர்வைகள் அஞ்சல் கட்டணங்கள் என்பனவும் 1990 இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

1989 இன் நடுப் பகுதியிலிருந்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தொழிற்பாட்டிலிருந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுகடன் உச்ச வரம்புகள் போன்ற நாணய வழிமுறைகள் 1990 இலும் தொடர்ந்திருந்தன. வங்கி வீதம் 1990 யூலையில் மீண்டும் திருத்தப்பட்டது. எனினும் இவ்வழிமுறைகளின் மத்தியிலும் பணக்கூட்டுக்கள் இவ்வாண்டுக் காலத்தில் விரிவடைந்து அதன் விளைவாக உயர்ந்த மட்டத்திலான மொத்தக் கேள்வி பேணப்பட்டது. இது விலை மட்டத்தில் மேலும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கலாம்.

## நுகர்வோர் விலைகள்

1990 இல் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 21.5 சதவீத ஆண்டுச் சராசரி வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது 1980 இலிருந்து பதிவு செய்யப்பட்ட மிகக் கூடிய அதிகரிப்பாகும். மொத்த அதிகரிப்பில் 74.4 சதவீதத்திற்கு உயர்ந்த உணவு விலைகள் பொறுப்பாயிருந்த வேளையில் ஆடைகள், எரிபொருளும் வெளிச்சமும் பல்வகை விடயம் என்பவற்றின் விலை அதிகரிப்புக்கள் முறையே 6.3 சதவீதம், 5.1 சதவீதம், 14.1 சதவீதம் கொண்ட பங்கினை வழங்கின.

1990 இன் முதல் அரைப்பகுதி விலைகளின் விரைவான அதிகரிப்பின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. யூலை, ஒத்தோபர் காலப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இதன் பின்னர் ஆண்டின் இறுதி இரு மாதங்களிலும் மீண்டும் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.33

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)**

| | சராசரி | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1988 இற்கு மேலாக 1989 | 1989 இற்கு மேலாக 1990 | 1988 திசெம்பருக்கு மேலாக 1989 திசெம்பர் | 1989 திசெம்பருக்கு மேலாக 1990 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் ... | 830.2 | 1,008.6 | 11.6 | 21.5 | 15.1 | 19.6 |
| டண்ட வகைகளின்படி | | | | | | |
| உணவு ... | 884.6 | 1,090.9 | 10.3 | 23.3 | 13.5 | 20.8 |
| உடை ... | 490.0 | 610.2 | 16.7 | 24.5 | 32.8 | 12.7 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 1,718.9 | 1,934.1 | 12.0 | 12.5 | 11.1 | 22.8 |
| வாடகை ... | 109.8 | 109.8 | — | — | — | — |
| பல்வகை ... | 860.2 | 1,021.0 | 15.8 | 18.7 | 19.7 | 16.6 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அமைந்த உணவுக்கான துணைச்சுட்டெண் (நிறை —61.9%) 1989 இன் 10.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 23.3 சதவீதத்தால் அதிகரித்தது. 1989 இன் பிற்பகுதியில் ஏற்கெனவே திருத்தியமைக்கப்பட்ட கோதுமை மா, பாண் என்பவற்றின் விலை 1990 இன் முதல் அரைப்பகுதியில் மேல் நோக்கிய திருத்தத்திற்கு உட்பட்டது. இதன் விளைவாக 1990 இல் திருப்திகரமான நெல் அறுவடை பதிவு செய்யப் பட்டபோதிலும் கோதுமை மாவின் விலை அதிகரிப்பின் பிரதியீட்டு விளைவு காரணமாகவும் உயர்ந்த வளமாக்கி விலைகள் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்தமையினாலும் அரிசியின் விலையும் இவ்வாண்டில் உயர்வாகவே விளங் கியது. இவ்வாண்டில் மீன், மாட்டிறைச்சி, காய்கறிகள், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் போன்ற முக்கிய உணவு விடயங்களிலும் கணிசமான விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. செத்தல் மிளகாய், காய்கறிகள், உருளைக் கிழங்கு போன்ற வேளாண்மைப் பொருட்களின் விலைகளில் சிறுபோகத்தில் காணப்பட்ட மிதமான போக்கு யூலை, ஒத்தோபர் காலப் பகுதியில் விலைகளில் ஏற்பட்ட கீழ் நோக்கிய போக்கிற்குப் பொறுப்பாக அமைந்தது. எனினும் எரி பொருள் விலை அதிகரிப்பின் தாக்கமும் பருவகாலக் காரணிகளும் நவெம்பர் திசெம்பர் காலப்பகுதியில் உணவு விலைகளைக் கணிசமாக அதிகரித்தமையால் இப்போக்கினை உறுதியாகப் பேண முடியவில்லை.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அமைந்த ஆடைகளுக்கான துணைச் சுட்டெண் 1989 இன் 16.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 24.5 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு 12.7 சதவீதமாக மட்டுமே அமைந்தது.

எரிபொருளும் வெளிச்சமும் துணைச்சுட்டெண் 1989 இன் 12.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 12.5 சதவீதத்தால் அதிகரித்தது. பெரும்பாலும் நவெம்பரில் வளைகுடாப் பிரச்சனையைத் தொடர்ந்து மண்ணெண்ணெய் விலை மீளாய்வு செய்யப்பட்டமை காரணமாக 1989 திசெம்பருக்கும், 1990 திசெம்பருக்கும் இடையே இத்துணைச் சுட்டெண்ணில் 22.8 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. (மண்ணெண்ணெய் விலை 1983 தொடக்கம் மாற்றமின்றியிருந்தது) விறகின் விலைகளும் இவ்வாண்டில் அதிகரித்தன. பல்வகை விடயங்களுக்கான துணைச் சுட்டெண் 18.7 சதவீதங் கொண்ட ஆண்டுச் சராசரி வளர்ச்சியைப் பதிவு செய்தது. முந்திய ஆண்டின் நேரிணையான வளர்ச்சி 15.8 சதவீதமாகும். உயர்வான பொதுப் போக்குவரத்துக் கட்டணங்களும் அஞ்சல் கட்டணங்களும், மதுவகைகளினதும் சிகரெட்டுக்களினதும் விலைகளில் செய்யப்பட்ட மீளமைப்புக்களும் இவ் அதிகரிப்புக்கான காரணிகளாகும்.

## மொத்த விற்பனை விலைகள்

ஆரம்பச் சந்தை மட்டத்தில் 1989 இன் இறுதிச் சில மாதங்களில் காணப்பட்ட விலைகளின் உயர்ந்து செல்லும் போக்கு 1990 இலும் தொடர்ந்து காணப்பட்டு மொத்த விற்பனை விலைச் சுட்டெண் ஆண்டுச் சராசரி அதிகரிப்பாக 22.2 சதவீதத்தைப் பதிவு செய்தது. முந்திய ஆண்டில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 9.0 சதவீதத்தால் மட்டும் உயர்வடைந்தது. எனினும் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1989 திசெம்பருக்கு மேலாக 1990 திசெம்பரில்) சுட்டெண் ஒப்பீட்டு ரீதியில் குறைவான அதிகரிப்பான 17.0 சதவீதத்தைப் பதிவு செய்தது.

இவ்வாண்டில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கு உயர்ந்த உணவு விலைகள் குறிப்பிடத்தக்களவு காரணமாயின. நெல், செத்தல் மிளகாய், காய்கறிகள் போன்ற விடயங்களில் கணிசமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. சுட்டெண்ணில் தேயிலை உயர்வான நிறையைக் கொண்டுள்ளமையால் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றமும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தது. பண்டத் தொகுதிகளில் இரசாயனப் பொருட்கள், உலோகமல்லா உற்பத்திப் பொருட்கள் என்பவற்றில் கணிசமான விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வதிகரிப்புகளுக்கான முக்கிய காரணிகளாக முறையே வளமாக்கி விலைகளிலும் கட்டடப் பொருட்களின் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் விளங்கின. எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பெற்றோலிய உற்பத்திகளுக்கான துணைச் சுட்டெண் 23.1 சதவீதத்தால் உயர்வடைந்தது. பண்ட வகையிலான ஏனைய அனைத்துத் துணைச் சுட்டெண்களும் இவ்வாண்டில் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

துறைவகைப்படியான பகுப்பின்படி உள்நாட்டுத் தொகுதியின் துணைச் சுட்டெண் 1989 இன் 21.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 26.7 சதவீதத்தால் அதிகரித்தது. இறக்குமதிகளுக்கான துணைச் சுட்டெண் இவ்வாண்டில் 26.2 சதவீதத்தால் உயர்வடைந்தது. 1989 இல் நேரிணையான அதிகரிப்பு 13.7 சதவீதமாக விளங்கியது. முந்திய ஆண்டில் வீழ்ச்சியடைந்திருந்த ஏற்றுமதி விலைகள் 1990 இல் 13.2 சதவீதத்தால் அதிகரித்தன.

அட்டவணை 1.34

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)

| விடயம் | | சாாசரி 1989 | சாாசரி 1990 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 1988 இனைவிட 1989 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 1989 இனைவிட 1990 | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் 1988 திசெம்பரை விட 1989 திசெம்பரில் | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் 1989 திசெம்பரை விட 1990 திசெம்பரில் |
|---|---|---|---|---|---|---|---|
| பண்டவகைப்படி | | | | | | | |
| எல்லா விடயங்களும் | ... | 532.9 | 651.1 | 9.0 | 22.2 | 18.3 | 17.0 |
| உணவு | ... | 493.3 | 599.1 | 4.5 | 21.4 | 16.1 | 14.7 |
| வெறிக் குடிவகைகள் | ... | 573.0 | 668.9 | 13.9 | 16.7 | 22.0 | 11.1 |
| புடவை, காலணிகள் | ... | 343.6 | 404.7 | 4.3 | 17.8 | 6.0 | 18.8 |
| தாள் உற்பத்திகள் | ... | 550.1 | 722.4 | 21.6 | 31.3 | 16.2 | 30.4 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் | ... | 291.9 | 423.8 | 12.5 | 45.2 | 6.7 | 40.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | ... | 762.3 | 938.4 | 11.3 | 23.1 | 22.8 | 31.3 |
| உலோகமல்லா உற்பத்திகள் | ... | 735.9 | 1131.4 | 11.8 | 53.7 | 12.8 | 53.6 |
| உலோக உற்பத்திகள் | ... | 469.6 | 568.6 | 31.0 | 21.1 | 13.9 | –0.7 |
| போக்குவரத்து கருவிகள் | ... | 395.9 | 504.4 | 23.2 | 27.7 | 17.2 | 24.7 |
| மின் கருவிகளும் வழங்கல்களும் | ... | 427.8 | 532.7 | 23.6 | 24.5 | 37.2 | 4.8 |
| பொறிகள் | ... | 285.7 | 375.1 | 8.1 | 31.3 | 3.1 | 34.6 |
| எரிபொருளும் வெளிச்சமும் | ... | 1,002.9 | 1233.6 | 33.0 | 23.0 | 22.4 | 16.4 |
| பல்வகை | ... | 1,051.2 | 1167.6 | 27.1 | 11.0 | 36.2 | 4.2 |
| **துறைவகைப்படி எண் I** | | | | | | | |
| உள்நாட்டு வகை | ... | 466.0 | 590.3 | 21.6 | 26.7 | 23.6 | 22.5 |
| இறக்குமதி வகை | ... | 458.7 | 578.8 | 13.7 | 26.2 | 23.7 | 16.5 |
| ஏற்றுமதி வகை | ... | 772.1 | 874.2 | — 6.6 | 13.2 | 8.5 | 9.8 |
| **துறைவகைப்படி எண் II** | | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் | ... | 519.5 | 631.3 | 6.1 | 21.5 | 16.1 | 15.7 |
| இடைநிலைப் பொருட்கள் | ... | 588.4 | 714.1 | 18.8 | 21.4 | 26.8 | 18.6 |
| முதலீட்டுப் பொருட்கள் | ... | 503.6 | 700.3 | 14.6 | 39.1 | 17.2 | 33.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

முடிவுப் பயன்பாட்டுப் பகுதியில் நுகர்வுப் பொருட்களின் விலை 1989 இன் 6.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 21.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இடைநிலைப் பொருட்களின் விலைகள் 1989 இல் பதிவு செய்யப்பட்ட 18.8 சதவீத அதிகரிப்பைத் தாண்டி 21.4 சதவீதத்தால் அதிகரித்தன. முதலீட்டுப் பொருட்களின் விலைகள் 1989 இன் 14.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 39.1 சதவீதத்தால் மிகக் கணிசமாக அதிகரித்தன. கட்டடப் பொருட்களின் உயர்வான விலைகள் முதலீட்டுப் பொருட்களுக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்குப் பெருமளவு காரணமாயின.

### கூலிகள்

அரசதுறை, நன்கமைந்த தனியார்துறை என்பவற்றின் பொதுவான பெயரளவுக் கூலிகள் முந்திய ஆண்டினைவிட 1990 இல் விரைவாக அதிகரித்தன. பெயரளவுக் கூலிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் விலைகளில் ஏற்பட்ட விரைவான அதிகரிப்புக் காரணமாக பெரும்பாலும் எல்லா வகுப்புக்களையும் சார்ந்த வேலையாட்களின் உண்மைக் கூலிகளில் இவ்வாண்டில் வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை 1.35

**கூலிவீதச் சுட்டெண்கள்**
(1978 திசெம்பர்=100)

| | 1989 | | 1990 | | 1989 இனைவிட 1990இல் சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | |
| எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் | 396.0 | 114.4 | 439.6 | 104.3 | 11.0 | — 8.8 |
| சிற்றூழியர்கள் ... | 444.6 | 128.4 | 513.5 | 121.8 | 15.5 | — 5.1 |
| எல்லா மத்திய அரச ஊழியர்கள ... | 421.8 | 121.9 | 476.8 | 113.2 | 13.0 | — 7.1 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 367.8 | 106.3 | 404.5 | 96.0 | 10.0 | — 9.7 |
| **2. கூலிச் சபை நிர்ணய, வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | |
| வேளாண்மை தொழிலாளர்கள் ... | 435.9 | 125.7 | 517.2 | 122.7 | 18.7 | — 2.4 |
| கைத்தொழில் வர்த்தக தொழிலாளர்கள் ... | 334.9 | 96.6 | 379.5 | 89.9 | 13.3 | — 6.9 |
| பணிகள் தொழிலாளர்கள் ... | 245.9 | 71.0 | 267.8 | 63.5 | 8.9 | — 10.6 |
| கூலிசபை நிர்ணய, வர்த்தகத் தொழிலாளர்கள் ... | 388.1 | 112.0 | 453.5 | 107.6 | 16.9 | — 3.9 |

மூலங்கள் : தொழிற்றிணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

### நன்கமைந்ததுறை

பெயரளவிலான கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு எல்லா அரச ஊழியர்களுக்குமான பெயரளவுக் கூலிகள் முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 8.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 13.0 சதவீதத்தால்

## கூலி வீதச் சுட்டெண்கள்

1978 டிசெம்பர் = 100

காலாண்டுதோறும்







இலங்கை மத்திய வங்கி.

கணிசமாக அதிகரித்தன. இது பணவீக்கத்தினை ஈடு செய்வதற்காக நடுத்தர, குறைந்த மட்டச் சம்பளங்களைப் பெறும் அரசதுறை ஊழியர்களுக்கு இருமுறை வழங்கப்பட்ட சிறப்புப் படிகளின் காரணமாக ஏற்பட்டதாகும். ஒன்றிணைந்த ஆரம்ப சம்பள மட்டம் ரூ. 2,000 அல்லது அதற்குக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 1990 சனவரியிலிருந்து ரூ. 200 கொண்ட சிறப்புப்படி வழங்கப்பட்டவேளையில் ஒன்றிணைந்த ஆரம்ப சம்பள மட்டம் ரூ. 2000 அல்லது அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் ரூ. 2,001 இற்கும் ரூ. 3,000 இற்குமிடையே சம்பளம் பெறுவோருக்கும் இவ்வாண்டு நவெம்பர் மாதத்திலிருந்து முறையே மேலும் ரூ. 200, ரூ. 300 கொண்ட சிறப்புப் படிகள் வழங்கப்பட்டன. எனினும் இத்தகைய படிகள் வழங்கப்பட்டபோதிலும் இவ்வாண்டில் பொதுவாக அரசதுறையின் உண்மைக் கூலிகளில் 7.1 சதவீதங் கொண்ட கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. அரச துறையின் உண்மைக் கூலிகள் 1989 இல் 2.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன.

நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்களினதும் சிற்றூழியர்களினதும் பெயரளவிலான கூலிகள் முந்திய ஆண்டின் முறையே 8.8 சதவீத, 7.4 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 1990 இல் முறையே 11.0 சதவீதத்தாலும், 15.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. முந்திய ஆண்டினைப் போன்று இவ்விரு வகுப்புக்களிலும் உண்மைக் கூலிகளில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. அரச பாடசாலை ஆசிரியர்களின் பெயரளவுக் கூலிகளின் வளர்ச்சி முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் சிறிதளவு வேகம் குறைந்து காணப்பட்டது. இவ் வகுப்பில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு 1990 இல் 10.0 சதவீதமாக விளங்கிய வேளையில் 1989 இற்கான நேரிணையான அளவு 10.9 சதவீதமாக அமைந்திருந்தது.

கூலி நிர்ணய சபைக்குட்பட்ட வர்த்தகங்களை உள்ளடக்கிய நன்கமைந்த தனியார்துறையின் பொதுவான பெயரளவுக் கூலிகள் 1989 இன் 15.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 16.9 சதவீதத்தினால் உயர்வடைந்தன. உண்மைக் கூலி வீதங்கள் முன்னேற்றமடைந்த முந்திய ஆண்டிற்கு மாறாக 1990 இல் உண்மைக் கூலிகள் 3.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. வேளாண்மைத்துறைத் தொழிலாளர்களின் பெயரளவுக் கூலிகள் 1989 இன் 15.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 18.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்வகுப்பைச் சார்ந்த தொழிலாளர்களின் உண்மைக் கூலிகள் 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் வர்த்தகத்துறையின் தொழிலாளர்களின் பெயரளவுக் கூலிகள் 1989 இல் அடையப்பட்ட (23.3 சதவீதம்) வரவேற்கத்தக்க கூலி அதிகரிப்பினைவிட மிகவும் குறைவாக 13.3 சதவீதத்தால் அதிகரித்தன. சென்ற ஆண்டில் முன்னேற்றமடைந்திருந்த அவர்களது உண்மைக் கூலிகள் ஆய்விற்குரிய ஆண்டில் வீழ்ச்சியடைந்தன. முந்திய ஆண்டில் அவதானிக்கப்பட்டவாறு பணிகள்துறையில் உள்ள தொழிலாளர்களின் கூலிகளில் ஏற்பட்ட வளர்ச்சி ஏனைய வகுப்புக்களைச் சார்ந்தோரின் கூலிகளைவிடக் குறைவானதாக விளங்கியது. இவ்வகுப்பைச் சார்ந்த தொழிலாளரின் பெயரளவிலான கூலிகள் 1989 இன் 7.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 8.9 சதவீதத்தால் மட்டுமே உயர்வடைந்தன.

இவ்வாண்டில் கூலி நிர்ணயச் சபைக்குட்பட்ட பல்வேறு வர்த்தகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 200 கொண்ட அதிகரிப்பு வழங்கப்பட்டது. பட்டிக், தீப்பெட்டித் தயாரிப்பு, திரைப்படம், செங்கல் மற்றும் ஓடுகளின் தயாரிப்பு, நெல்லின் உமிநீக்கல், கண்ணாடிப் பொருட்கள், அப்ப மனைசார் வர்த்தகங்கள் ஆகியவற்றின் ஆகக் குறைந்த கூலிகளும் 1990 இல் அதிகரிக் கப்பட்டன.

தொழில்நிலை

தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1990 இல் தனியார்துறையின் தொழில்நிலை அதிகரித்துள்ளது. மாறாக அரசதுறையின் தொழில்நிலை சிறிதளவில் வீழ்ச்சி யடைந்தது. அரசதுறையில் அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை குறிப்பிடத் தக்களவில் வீழ்ச்சியடைந்தது.

அரசு, அரசுசார் நிறுவனங்களிலுள்ள அரசதுறைத் தொழில்நிலையின் மதிப் பீடுகள் மத்திய வங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அரசதுறைத் தொழில்நிலைமீது நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதன் காரணமாக அரச துணைத்துறை யின் தொழில்நிலை மீது சேகரிக்கப்பட்ட தரவுகள் திறைசேரியின் வருடாந்த தொழில்நிலை மதிப்பீடுகளுடன் மேலும் ஒத்திசைவிக்கப்பட்டன. தற்காலிகத் தரவுகளின்படி மொத்த அரசதுறை தொழில்நிலை 1990 இல் 1,318,150 ஆக அமைந்து 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது. அரச அமைச்சுக்கள், திணைக் களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்குகின்ற அரச நிறுவனங்களின் தொழில் நிலை, 1990 இறுதியில் 609,750 ஆக மதிப்பிடப்பட்டு 1989 இனைவிட 3.6 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு, பாதுகாப்பு ஆளணி யினரை உள்ளடக்குகின்ற பணி வேலையாட்கள் வகையிலுள்ள தொழில்நிலையில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கிய காரணமாக இருந்தவேளையில் ஏனைய வகைகளின் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது அல்லது மாற்றமின்றியிருந்தது. அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சபைகள், அரசதுறை வங்கிகள் போன்ற அரசுசார் நிறு வனங்களின் தொழில்நிலை 1990 இறுதியில் 708,400 ஆக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 5.5 சதவீதங் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

தொழில் ரீதியான வகைகளின்படியான தொழில்நிலைப் பகுப்பாய்வு, 529,850 எண்ணிக்கையைக் கொண்டிருந்த உடலுழைப்பாளர்கள் அரசதுறையி லுள்ள தொழிலாளர் தொகுதியில் தனிப்பெரும் தொகுதியாக விளங்கி மொத்தத் தில் 40.2 சதவீதத்திற்கு வகைகூறியமையை எடுத்துக் காட்டியது. எனினும் 1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இல் இவ்வகையிலிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உடலுழைப்பு வேலை யாட்களின் பெரும் விகிதத்தைக் கொண்டிருக்கும் தோட்ட வேலையாட்களின் மொத்த எண்ணிக்கை 1989 இறுதியில் 400,500 இலிருந்து 1990 இறுதியில் 394,100 இற்கு 1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1990 இல் அரசதுறையில் தொழில்சார், தொழில்நுட்ப மற்றும் அதனுடன் தொடர்பான வேலையாட்களின் எண்ணிக்கை 249,500 ஆக அமைந்து இத் துறையில் இரண்டாவது பெரும் வகையாக விளங்கியது. இந்த வகையானது அரசதுறையின் மொத்தத் தொழில்நிலையில் 19 சதவீதத்திற்கு வகை கூறியது. அரச துணைத் துறையின் இவ்வகையிலுள்ள தொழிலாளர்களில் ஏறத்தாள 70 சதவீதத்தினைக் கொண்டிருந்த பள்ளிக்கூட ஆசிரியர்கள், எழுதுவினைஞர் கள், மற்றும் அதனுடன் தொடர்பான வேலையாட்களின் எண்ணிக்கை 220,700 ஆக அமைந்து அரசதுறைத் தொழில்நிலையில் மூன்றாவது பெரும் வகையாக விளங்கியது.

அரசதுறையில் தனியொரு தொழில்வகையாகப் பணிகள் வேலையாட்களை நோக்குகையில் 1990 இல் இதன் எண்ணிக்கை 198,300 ஆக விளங்கி தொழில் நிலையின் பெரும் அதிகரிப்பினைப் (ஏறத்தாள 20 சதவீதம்) பதிவு செய்தது.

அரசதுறையில் தொழில்புரிவோரில் 78.7 சதவீதத்தினர் ஆண்களாக இருப் பதனைப் பால்வகைப்படியான பகுப்பாய்வு காட்டுகின்றது. படைத்துறை ஆளணி யினர் நீங்கலாக அரச நிறுவனங்களிலுள்ள ஆண் ஊழியர்களின் விகிதம் 71.5 சதவீதமாக இருந்தது. அரசுசார் நிறுவனங்களில் ஆண் ஊழியர்கள் உயர்ந்த விகிதமான 85.5 சதவீதத்திற்கு வகை கூறினர். உயர்ந்த எண்ணிக்கையான பெண்கள் எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்பான வேலையாட்கள், தொழில்சார், தொழில்நுட்ப மற்றும் தொடர்பான வேலையாட்கள் ஆகிய வகைகளில் காணப்பட்டனர்.

தனியார்துறையின் தொழில்நிலை மீதான ஆண்டுத் தொடர் தரவுகள் கிடைக்காமையின் காரணமாக இத்துறையின் தொழில் மட்டத்தினை மதிப்பிடு வதற்கு ஏனைய குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. ஊழியர் சேம நிதியத் துடன் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1990 இறுதியில் 4,665,134 இற்கு 4,3 சதவிதத்தினால் அதிகரித்தது. இதே காலப்பகுதியில் ஊழியர் சேம நிதியத்துடனான தொழிற்படு கணக்குகளின் எண்ணிக்கை 1,175,444 இலிருந்து 1,188,757 இற்கு உயர்வடைந்து 1.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1990 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதி யத்திலுள்ள தனியார்துறை ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 82,778 ஆக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 44.6 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் தொழிற் படுகின்ற தொழில் முயற்சிகள் ஆய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்து விரிவடைந் தன. 1990 இறுதியில் கொ.பெ.பொ. ஆணைக் குழுவின் முயற்சிகளிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 71,585 ஆக விளங்கி 1989 இனைவிட 16.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இத்தொழில்நிலை வாய்ப் புக்கள் 120 செயற்றிட்டங்களினால் வழங்கப்பட்டதுடன் இவற்றில் 65 செயற் றிட்டங்கள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்திருந்தன. ஏனைய செயற்றிட்டங்கள் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் கொ.பெ.பொ. ஆணைக் குழுவிற்கு வெளியேயும் அமைந்துள்ளன.

வறுமை ஒழிப்பு, சுய வேலைவாய்ப்பு என்பனவற்றின் மீதான அரசின் நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, வேறுபட்ட கடன் திட்டங்களின் கீழ் சுயதொழில் வாய்ப்பு மற்றும் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளுக்கா க வழங்கப் பட்ட கொடுகடன் வசதிகள் விரிவடைந்துள்ளன. இத்திட்டங்களின்கீழ் கடன் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்க விகிதத்தினர் வருவாய் உருவாக்க நடவடிக்கை களில் முதலீடு செய்தமையின் காரணமாக புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளமையை அண்மைய ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. மேலும் 1990 இல் நிலவிய சாதகமான பொருளாதார வளர்ச்சியும் நாட்டின் மேலதிக தொழில் உருவாக்கத்திற்கு வழியமைத்திருக்கலாம். அதேவேளை இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளி நாட்டுத் தொழில் கட்டளைகள் 1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இல் 21.5 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டின.